மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | |
|---|---|
| அ.வ.எண். 82/2011 | பி.வா.சா. 2 |
| பெயர் : சிங்காரவேலன் | த/பெ. : ராமு |
| தாலுகா : நத்தம் | கிராமம் : கோவில்பட்டி |
| தேதி : 21.10.2019 | வயது : 40/2019 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**<u>மு.வி</u>**:- நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதனை ஏற்றுக்கொண்டு வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>கு.வி. :</u>** வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி. வேறொரு நாள் ஒத்தி வைக்கப்பட்டது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **21-10-2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | |
|---|---|
| அ.வ.எண். 82.்.2011 | வா.சா. 1 |
| பெயர் : வசந்தா | த/பெ. : ஆறுமுகம்பிள்ளை |
| தாலுகா : நத்தம் | கிராமம் : நத்தம், கோவில்பட்டி |
| தேதி : 05.01.2019 | வயது : 57 /2019 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. :</u>** 3ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த அக்கா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள நாங்கள் அனைவரும் மலேசியா நாட்டில் நிரந்தர குடியுரிமை பெற்றவர்கள் என்றால் சரிதான். நானும், எனது தாயார், 2ம் வாதி மகாலிங்கம் ஆகியோர்

வைத்தியத்திற்காக தற்காலிக விசா பெற்று இங்கு தங்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு நிரந்தர விசா கிடைத்துவிட்டது. அந்த விபரம் குறித்து எனது நிரூபண வாக்கு மூலத்திலோ, வழக்கிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு பின்பு எங்களுக்கு நிரந்தர விசா கிடைத்தது. ஒரு வருடம், அல்லது இரண்டு வருடம் இருக்கும். சரியான தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நிரந்தரமாக மலேசியாவில் வசித்து வந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அது கணிணி பிழையால் ஏற்பட்டிருக்கிறது. வழக்கு சொத்தை எனது தகப்பனார் கிரையம்பெற்றதாக சொல்லியிருக்கிறேன். அதற்குரிய அசல் கிரையப் பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அது எனது சகோதரி 2ம் பிரதிவாதி வசம் இருந்தது. 29-11-1960ம் தேதியில் கிரையம் வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த தேதியிலும் எனது தகப்பனார் மலேசியாவில் நிரந்தர குடியுரிமை பெற்றவர் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை எனது தகப்பனார் நேரடியாக அனுபவிக்கவில்லை என்றால் சொந்தக்காரர்கள் மூலமாக அனுபவம் செய்து வந்தார். சபாபதி பிள்ளை மூலமாக அனுபவித்து வந்தார். அதற்கு முன்பு எனது தாத்தா வைத்தியலிங்கம்பிள்ளை பொறுப்பில் இருந்தது. சபாபதிபிள்ளையும், வைத்தியலிங்கம்பிள்ளையும் எவ்வளவு காலம் அந்த சொத்துக்களை பராமரித்து வந்தார்கள் என்ற விபரம் எனது தகப்பனாருக்குத்தான் தெரியும். எனக்கு நேரடியாகத் தெரியாது. சபாபதிபிள்ளையும், வைத்தியலிங்கம்பிள்ளையும் சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் இல்லை. நான் சொல்வது போல் மேற்படி நபர்கள் யாரும் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா மலேசியாவில் 1984ல் இறந்தார். அதற்கு பின்பு இந்த சொத்துக்களை வாதிகளாகிய நாங்கள் நேரடியாக அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது உறவினர் மூலமாக அனுபவித்தோம். அந்த உறவினர் யார் என்றால் எனது சகோதரர் சேகருக்குத்தான் தெரியும். மேற்படி விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் மோசடியாக இந்த சொத்தை 04-10-1999ம் தேதியில் கிரையம் பெற்ற விபரம் கிரைய காலத்திலே எங்களுக்கு



தெரியும் என்றால் சரியல்ல. நாங்கள் இங்கு 2010ல் வந்தபோதுதான் அந்த கிரையம் குறித்து எனக்கு தெரியும். இடைப்பட்ட காலத்தில் எனது அண்ணன் சேகர் மூலமாக பராமரித்து வந்த நபரும் கிரையம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தைத் தவிர புன்னப்பட்டி கிராமத்தில் எங்களுக்கு ஒரு சொத்து இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்தை 3ம் பிரதிவாதி கிரையம் செய்திருந்தார் என்றால் சரிதான். அதை ஆட்சேபணை செய்து இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.94∵2012 என்று கிரையம்பெற்ற மணி மீது வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் மணியிடம் நாங்கள் ஒரு தொகை பெற்றுக் கொண்டு வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான்.

அவர் எங்களுக்குரிய உரிமையை ஒப்புக்கொண்டு தொகை கொடுத்ததால் நாங்கள் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டோம். அந்த கிரைய விபரமும் எங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரியல்ல. இங்கு வந்த பின்னர்தான் அந்த கிரையம் குறித்து தெரியும். இடையப்பட்டி கிராமத்தில் செந்தில்குமார் என்பவர் கிரையம் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். அந்த சொத்தை விற்பதற்கு எனது அம்மா 3ம் பிரதிவாதிக்கு பவர் கொடுத்து அதனடிப்படையில் விற்பனை செய்து அதில் பாதி பணத்தை எங்களிடம் ஒப்படைக்கவில்லை. எனது அக்கா குடியிருக்கும் வீடு சம்பந்தமாக எங்களுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டு எனது சகோதரி அ.வ.எண்.36.'.2010 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த பிரச்சனையின் அடிப்படையில்தான் இந்த வழக்கையும் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தவறு. வழக்கு சொத்து என்பது 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் திருமணமான காலத்திலிருந்தே இருந்து வந்தது என்றால் தவறு. எனது தகப்பனார் இறந்த காலத்திற்கு பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை வழக்கு சொத்து சம்பந்தமாக எங்களது உரிமையை நிலைநாட்ட எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் எங்களுக்கு ஏதேனும் உரிமை இருந்தாலும்கூட அது சட்டப்படி நசிந்துவிட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காலத்திற்கு பின்பு வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரைக்கும் நாங்கள் சொத்தில் அனுபவத்தில் இருந்ததற்கான எந்த ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் நாங்கள்தான் அனுபவித்து வந்தோம். மலேசியாவில் இருந்து இந்தியாவிற்கு 2009ம் ஆண்டு வரும் வரை நாங்கள் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. குத்தகைக்கு விட்டு அனுபவித்து வந்தோம். எங்களது அண்ணன் சேகருக்குதான் தெரியும். இந்த வழக்கில் எங்களது அண்ணன் சேகரை விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் அவர் மலேசியாவில் இருக்கிறார். தற்பொழுது 1ம் பிரதிவாதி பெரியாண்டி வசம் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நன்றாக தெரியும். அந்த சொத்தை பெரியாண்டி தனது மகன்களுக்கு தானம் எழுதிக் கொடுத்து அவர்களும் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியும். இந்த விபரங்கள் அனைத்தும் எனக்கு 2013ம் ஆண்டு பத்திரங்கள் எழுதப்பட்டபோது தெரியும். அவ்வாறு தெரிந்தவுடன் கிரையம் பெற்ற 7 முதல் 9 பிரதிவாதிகளிடம் ஆட்சேபணை சொல்லவில்லை என்றால் சரிதான். தாலுகா ஆபிசில்



ஆட்சேபணை செய்தேன். 7 முதல் 9 பிரதிவாதிகள் கிரையம் சம்பந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் செய்த ஆட்சேபணையின் நகல்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்படும்போது தாக்கல் செய்வேன். எனக்கு 7 முதல் 9 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விபரம் தெரிந்தும் சட்ட காலத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்காததால் அந்த பத்திரங்கள் சம்பந்தமாக நாங்கள் கேட்டுள்ள பரிகாரம்

எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் எங்களுக்கும் பாகம் இருக்கிறது என்று சொல்லிதான் வாதாடுகிறேன் என்றால் சரிதான். வாதிகளான எங்களுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தலா ஒரு பாகம் இருப்பதாகத்தான் எங்களுடைய வாதம் என்றால் சரிதான். அவ்வாறான நிலையில் நாங்கள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யாமல் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால்சரியல்ல. வழக்கு சொத்து எந்த காலத்திலும் எங்களுடைய அனுபவத்தில் இல்லாததால் நாங்கள் கேட்டுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் யார் மூலமாக அனுபவம் செய்தோம் என்ற விபரங்களை வழக்கிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லாத நிலையில் தற்பொழுது சாட்சியத்தில் பொய்யாக அனுபவம் செய்து வருவதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து நீண்ட கால அனுபவமாக 3ம் பிரதிவாதி வசம் இருந்தது என்றும், அதனடிப்படையில் அவர் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையம் செல்லும் என்றால் சரியல்ல. நாங்கள் காலம் கடந்து கேட்டுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் சட்டப்படியான உரிமை எதுவும் எங்களுக்கு இல்லை என்றால் சரியல்ல.

4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **05-01-2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண்.82∴2011 வா.சா. 1

பெயர் : வசந்தா ஆறுமுகம்பிள்ளை த∴பெ. : ஆறுமுகம் பிள்ளை

தாலுகா : நத்தம் கிராமம் : நத்தம், கோவில்பட்டி

தேதி : 18.01.2019 வயது : 57 ∴2019

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. :** எனது தந்தை மலேசியாவில் நிரந்தர குடியுரிமை பெற்றவர் என்று சொன்னால் சரிதான். நானும், மற்ற வாதிகளும் மலேசியாவில் நிரந்தர குடியுரிமை பெற்றவர்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 பவர் பத்திரம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெறும்பொழுது எனது தந்தை மலேசியாவில்தான் இருந்தார். எனது தகப்பனார் பணம் அனுப்பி எனது தாத்தா மூலம் கிரையம் வாங்கினார். எனது தந்தை மலேசியாவில்தான் இறந்தார். மலேசியாவில் குறிப்பிட்டு எந்த இடத்தில் இறந்தார் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை இறக்கும்பொழுதும், 3ம் பிரதிவாதி மதியரசி (எ) ஜெயலெட்சுமி இந்தியாவில் நத்தத்தில்தான் குடியிருந்தார் என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் இந்தியாவில் உள்ள நத்தத்தில் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மலேசியாவிலும் வாரிசு சான்றிதழ் வாங்கியிருக்கிறோம். தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம். நத்தத்தில் வழங்கப்பட்டுள்ள வாரிசு சான்றிதழ் குறித்து அதனை வழங்கிய அலுவலரை விசாரித்தால் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தின் மூல ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்ற வா.சா.ஆ.2 அசலை நான் நேரடியாக பார்க்கவில்லை. சான்றிட்ட நகலைதான் பார்த்தேன். தாவா சொத்துக்கு எனது தந்தை பெயரில் பட்டா, சிட்டா எதுவும் பெறவில்லை என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு எனது தந்தை பெயரில் வரி வகையரா எதுவும் நாங்கள் செலுத்தவில்லை என்று சொன்னால் எனது தாத்தா பொறுப்பில்தான் இருந்தது. தாவா சொத்தை எனது தாத்தா இருக்கும்வரை அவர் பராமரித்தார். எனது தாத்தா இறந்த பின்னர் எனது சொந்தக்காரர்கள் பார்த்துக்கொண்டார்கள். மேற்படி விபரத்தை எனது வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 3ம் பிரதிவாதி மதியரசி (எ) ஜெயலெட்சுமி, அவரது கணவரும்தான் பராமரித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் நீண்ட கால அனுபவத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்று சொன்னால் அது தவறு. மேற்படி விபரம் எனக்கும், மற்ற வாதிகளுக்கும் தெரியும் என்று

சொன்னால் தவறு. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் தவறு. அதனடிப்படையில்



1ம் பிரதிவாதி தாவா சொத்தில் மாங்கன்றுகள் நடவு செய்து அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் தவறு. 1ம் பிரதிவாதியின் பெயரிலான கிரையத்தின் அடிப்படையில் பட்டாவும், வருவாய்துறை ஆவணங்களும் ஏற்பட்டது என்று சொன்னால் அது மோசடியாக பெறப்பட்டதாகும். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து கிரையம் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது என்று சொன்னால் தவறு. மேற்படி விபரங்கள் எனக்கும், மற்ற வாதிகளுக்கும் தெரியும் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக 10-10-2010ல் தான் தெரியும் என்று பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னர் என்னை பார்த்து நேரடியாக பேசி சமரசமாகிவிட்டதால்தான் 1ம் பிரதிவாதி பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வயோதிகம் காரணமாக தாவா சொத்துகளை அவரது மகன்களுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அது தவறாக எழுதிக் கொடுத்திருக்கிறார். வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்கள் நத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு நாங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் எதிர்ப்பு தெரிவித்தோம். அந்த எதிர்ப்பு தெரிவித்த ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்படும்பொழுது தாக்கல் செய்வோம். வா.சா.ஆ7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியின் மகன்கள் பெயரில் பட்டாக்கள் ஏற்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் தவறு. அவர்கள் அனுபவம் செய்து வந்ததின் அடிப்படையில்தான் பின்னிட்டு 7, 8 பிரதிவாதிகளுக்கு 5, 6 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்தார்கள் என்று சொன்னால் தவறு. 7, 8 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் அவர்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்று சொன்னால் தவறு. 7, 8 பிரதிவாதிகள் பெற்ற கிரையத்தின் அடிப்படையில்தான் பின்னிட்டு 9ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்று சொன்னால் தவறு. தாவா சொத்துக்களை 7 முதல் 9 பிரதிவாதிகள்தான் நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. தாவா சொத்தின் நான்குமால் எனக்கு தெரியும். தாவா சொத்தைப் பொறுத்து நானும், மற்ற வாதிகளும் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நானும், மற்ற வாதிகளும், எனது தந்தையோ அனுபவம் செய்து வந்ததாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் எனது உறவினர்கள் அனுபவத்தில் இருந்ததாக சொல்லியிருக்கிறேன். சொத்தை அனுபவம் செய்யாத ஒருவர் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் வாரிசுகள் என்ற அடிப்படையிலும் நான் உரிமை கோர

முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்வது போல் 03-03-2011ம் தேதி எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினா் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு



எங்களது பெயரிலோ, ஆறுமுகம்பிள்ளை பெயரிலோ பட்டாவோ, கி'தி ரசீதுகளோ, அனுபவ ஆவணங்களோ இன்றி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் காலாவதி தோசத்திற்கு உட்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் நான் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் நாங்கள் கோரும் சுவாதீனப் பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக ஆவணங்களை ரத்து செய்யக்கோரும் பரிகாரம் எதுவும் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் வழக்கை 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு செலவு தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

9ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞா் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **18-01-2019** கையெழுத்து செய்துள்ளாா்.

மா.உ.ம.நீ.நடுவா், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண். 82.'.2011 வா.சா. 1

பெயர் : வசந்தா ஆறுமுகம்பிள்ளை த.'.பெ. : ஆறுமுகம்பிள்ளை

தாலுகா : நத்தம் கிராமம் : நத்தம், கோவில்பட்டி

தேதி : 24.01.2019 வயது : 57 ∴2019

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**<u>9ம் பிரதிவாதி தரப்பில் கு.வி. :</u>** தாவா சொத்தில் எனக்கு 7ல் ஒரு பாகம் உள்ளது என்று சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 1வது பாராவில் நானே 7ல் ஒரு பாகம்தான் இருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை. நாங்கள் வழக்கு முழு சொத்திற்கும் விளம்புகை பரிகாரம் கேட்டுதான் தாக்கல் செய்திருக்கிறோம். நாங்கள் பாக வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் தீர்ப்பாணை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் மூலம் ஆணையர் நியமனம் செய்து எங்களுடைய பாகம் எந்த பக்கம் என்று சொல்லி நிர்ணயம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கேட்டிருக்கிறோம் என்றால் சரிதான். ஒப்படைப்பு பரிகாரம் கேட்கும்பொழுது ஒவ்வொருவரின் நான்குமால் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் ஒவ்வொருவரின் பாகத்தையும், நான்குமாலையும் சொல்லி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நாங்கள் மொத்தமாகத்தான் பரிகாரம் கேட்டிருக்கிறோம். நாங்கள் ஒவ்வொருவரின் பாகத்தையும் குறிப்பிட்டு பரிகாரம் கேட்காததால் ஒப்படைப்பு பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. பாக வழக்கு தாக்கல் செய்த பின்னர் நாங்கள் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எனது அப்பா மலேசியாவில் இறந்தார். இறப்பு சான்றிதழ் மலேசியாவில் வாங்கப்பட்டுள்ளது. எனது அப்பா இறந்துவிட்டார் என்பதை நிரூபிக்கக்கூடிய இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் எங்களது வாரிசுகள் குறித்து ஆட்சேபணை செய்துள்ளதால், எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம். வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாததால் வழக்கில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது மோசடியாக கிரையம் செய்து கொடுத்திருக்கிறார். அந்த விபரம் எனக்கு 2009ம் ஆண்டு நான் இந்தியா வந்தபோது எனக்கு தெரியும். நான் 2009ம் ஆண்டிற்கு முன்பாக மலேசியாவில் நிரந்தரமாக குடியிருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யாததால் நான் மலேசியாவில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மலேசிய குடியுரிமை பெற்றிருக்கிறேன். எனக்கு

3ம் பிரதிவாதி கிரையம் செய்த விபரம் ஏற்கனவே தெரியும் என்றும், வழக்கிற்காக 2009ம் ஆண்டு தெரியும் என்று பொய்யாக



சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் 2011ம் ஆண்டு கிரையம் செய்த விபரம் தெரியும் என்றும், தற்பொழுது சாட்சியத்தில் 2009ம் ஆண்டு கிரையம் செய்த விபரம் தெரியவந்ததாக முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2009ம் ஆண்டு எனது தாயாரின் மருத்துவத்திற்காக வந்த பின்னர் 2010ல் கிரையம் தெரிந்து அதுகுறித்து 2011ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 3ம் பிரதிவாதி 04-10-1999ம் தேதியில் கிரையம் செய்த நிலையில் நான் 23-09-2011ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பதிவு பெற்ற கிரையம்தான் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் அது மோசடியான கிரையம் ஆகும். கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்டுவிட்டதாலே அனைவருக்கும் தெரிந்து கொண்டதாகத்தான் எடுத்துக் கொள்ள முடியும் என்றால் சரியல்ல. எனது சகோதரி எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தில் நான் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். அந்த கிரையப் பத்திரம் பெயரளவில் எழுதப்பட்டது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் தரப்பினராக இல்லாமல் அந்தக் கிரையப் பத்திரத்தை செல்லாது என்று அறிவிக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. பதிவு பெற்ற ஆவணத்திற்கு எதிராக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருக்கிறது என்று சொன்னால் அது தவறான பட்டாவாகும். அந்த பட்டாவை ஆட்சேபித்து நான் தாசில்தாரிடம் கொடுத்த மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா இன்றுவரை இருப்பதால் அவர்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை. பொதுவாகத்தான் அனுபவித்து வந்தோம். எங்களது பெயரில் உள்ள கூட்டுப்பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் கிரையப் பத்திரம் இருந்தது. எனது தகப்பனார் இறந்த பின்னர் வழக்கு சொத்து எங்களது கூட்டு அனுபவத்தில் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்களது உறவினர்களிடம் ஒப்படைத்து அனுபவம் செய்து வந்தோம். நாங்கள் நேரடியாக சொத்தை அனுபவிக்கவில்லை. உறவினர்கள் மூலமாகத்தான் அனுபவம் செய்து வந்தோம். எங்களது தாத்தாவிடம் ஒப்படைத்தும், அவர் இறந்த பின்னர் எங்களது தாய்மாமனிடம் பொறுப்பில் ஒப்படைத்தோம். எங்களது உறவினர்கள்தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்பதை நிரூபிக்கும் பொருட்டு அவர்களை சாட்சியாக விசாரிப்பீர்களா என்றால் அவர்கள் இறந்துவிட்டார்கள். மேற்படி விபரத்தை நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை பார்த்தார்கள் என்று எனக்கு வருடம் ஞாபகமில்லை. எனது அப்பா இறந்ததற்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ என்றால் எனது அப்பா இறந்ததற்கு பின்பாகத்தான். எனது தகப்பனார் இறப்பிற்கு பின்பு இளைய சகோதரர் பார்த்தார். 1ம் பிரதிவாதியின்



பெயரிலான கிரையத்தை குறித்தும் பட்டா மாறுதல் குறித்தும் போலீசில் புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுக்கவில்லை. மேற்படி நான் சொல்வது போல் சொத்துக்களை யாரும் பராமரிக்கவில்லை என்றும், 3ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கிரையம் செய்ததற்கு பின்பாக போலீசில் புகார் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரிமினல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். தற்பொழுது உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. சார்பதிவாளரிடம் ஆட்சேபணை எதுவும் கொடுத்தோமா என்றால் வட்டாட்சியரிடம்தான் ஆட்சேபணை செய்தேன். அவர்கள் பதில் எதுவும் சொல்லவில்லை. சார்பதிவாளரிடம் நான் ஆட்சேபணை கொடுக்கவில்லை. வக்கீல் மூலமாக தாசில்தாருக்கு நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் நீதிமன்றத்தை தூய கரங்களுடன் அணுகவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் உண்மையான சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி கருப்பையாவை பின்னிட்டு வழக்கு சொத்தை வாங்கியதால் தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். 9ம் பிரதிவாதியின் கிரையத்தை செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 9ம் பிரதிவாதியின் கிரையத்தின் அடிப்படையில் அவரது தனிப்பட்ட அனுபவத்தில் இருக்கிறது என்றும், அந்த சொத்தைப் பொறுத்து நான் சுவாதீன பரிகாரம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 9ம் பிரதிவாதியின் கிரையச் சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அது வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது வாங்கியிருக்கிறார். 9ம் பிரதிவாதியின் சொத்தைப் பொறுத்தளவில் எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>ம.வி. :</u>** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **24-01-2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | |
|---|---|
| அ.வ.எண். 82/2011 | பி.வா.சா. 1 |
| பெயர் : மதியரசி | க/பெ. : கிருஷ்ணன் |
| தாலுகா : நத்தம் | கிராமம் : நத்தம். |
| தேதி : 24.06.2019 | வயது : 65/2019 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**<u>மு.வி. :</u>** நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். ஆவணங்கள் எதுவும் இல்லை. குறுக்கு விசாரணை வேறு ஒருநாள் செய்யப்படும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **24-06-2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண். 82/2011 பி.வா.சா. 1

பெயர் : மதியரசி க/பெ. : கிருஷ்ணன்

தாலுகா : நத்தம் கிராமம் : நத்தம்

தேதி : 22.07.2019 வயது :65/2019

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

<u>கு.வி. :</u>

1ம் வாதி என்னுடைய தாயார் ஆவார். 2 முதல் 6 வாதிகள் என்னுடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. 3ம் பிரதிவாதி என்னுடைய கணவர். 1ம் பிரதிவாதி என்னிடம் கிரையம் வாங்கியவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். தாவாச் சொத்தை கடந்த 29.11.1960ம் தேதி என்னுடைய தகப்பனார் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் சம்பந்தமாக எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. 1ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும்போது தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் விபரம் நான் தெரிந்துகொண்டேன். தாவாச் சொத்தை நானும், என்னுடைய கணவரும் கடந்த 28 வருடங்களாக அனுபவித்து வந்ததால் எங்களுடைய சொத்து என்று 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் தாவாச் சொத்து என்னுடைய தகப்பனார் எனக்கு சீதனமாக கொடுத்த சொத்தாகும். எதிர்வழக்குரையில் எனக்கு சீதனமாக கொடுத்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1974ம் வருடம் ஜீன் மாதம் நான் மலேசியாவிலிருந்து இந்தியா வந்தேன். வாதிகள் அனைவரும் அப்போது மலேசியாவில் தான் இருந்தார்கள். 2009ம் வருடம் 5ம் வாதியான என்னுடைய சகோதரி இந்தியாவிற்கு வந்ததற்கு பின்னிட்டு சொத்து சம்பந்தமாக எனக்கும், அவருக்கும் பிரச்சினை ஏற்பட்டது. மற்ற வாதிகளுடன் சுமூகமான உறவுமுறை இல்லையா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்ட பத்திரத்தில் செக்யூரிட்டி கொடுத்த சொத்தாக என்னுடைய கணவருக்கு சொந்தமான சொத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் +2 வரை படித்துள்ளேன். கிரையம் கொடுத்ததற்கு பின்னிட்டு அந்த கிரையப்பத்திரத்தை நான் நகல் எடுத்து படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அவ்வாறு எனது கணவர் செக்யூரிட்டியாக கொடுக்கப்பட்ட சொத்துக்களை என்னுடைய மகனான பிரபாகரன் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் தானசெட்டில்மெண்ட எழுதிய விபரம் எனக்கு தெரியும். ஆனால் அதில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. தானபத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 13.09.2013ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்

சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆகும். தாவாச் சொத்தில் விற்பதற்கு எனக்கு உரிமையில்லாததால் தான் என்னுடைய கணவரின் சொத்தை செக்யூரிட்டியாக காண்பித்து 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கும் சொத்தில் பங்கு உள்ளதென்றும், அதனால் தான் நான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது செல்லாது போனால் செக்யூரிட்டியாக கொடுத்த சொத்துக்களுக்கு பிரச்சினை வரும் என்பதால் நான் வழக்கை முன்னின்று நடத்துகிறேன் என்றால் சரியல்ல. தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு தாவாச் சொத்தில் எனக்கு 1/7 பாகமும் மற்ற வாதிகளுக்கு 6/7 பாகமும் உள்ளதென்றால் சரியல்ல. அவர்களுடைய பாகத்தையும் சேர்த்து சட்டத்திற்கு விரோதமாக நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன். அதனால் கிரையம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் பொதுவாக அனைவரும் அனுபவித்து வருகிறோம் என்றும், என்னுடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லையென்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது 5 முதல் 9 பிரதிவாதிகளுக்கு அடுத்தடுத்து ஏற்படுத்திய கிரையங்கள் எதுவும் செல்லாது என்றால் சரியல்ல. வாதிகளை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக நானும், என் கணவரும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்துள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதிகள் மலேசியாவில் இருந்ததால் 1ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் சுவாதீனத்தை சட்டவிரோதமாக ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. வழக்குப்படி வாதிகளுக்கு பரிகாரம் கிடைக்க தகுதியானவர் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **22-07-2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண். 82/2011 பி.வா.சா.1

பெயர் : மதியரசி க/பெ. : கிருஷ்ணன்

தாலுகா : நத்தம் கிராமம் : நத்தம்

தேதி : 05.08.2019 வயது : 65 /2019

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**<u>9ம் பிரதிவாதி தரப்பு கு.வி. :</u>** வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். வாதிகள் பாகப்பரிவினை கோராமல் விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரிதான். தாவாச் சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இருப்பதால் சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யாமல் விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் ஆறுமுகம் பிள்ளை என்பதற்கான வாரிசு சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்ததை ரத்து செய்ய சொல்லி மூன்று வருடத்திற்குள் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் பிராதில் குறிப்பிட்டுள்ளவாறு தாவாச் சொத்து அவர்களுக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளது சரியல்ல. அது என்னுடைய தகப்பனார் சீர்வரிசையாக எனக்கு கொடுத்த சொத்தாகும். கிரையம் கொடுத்தபின் 12 வருடங்களுக்கு பின்பு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தாவாச் சொத்துக்களை என்னிடம் கிரையம் வாங்கியவர் வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார். மற்றும் 9ம் பிரதிவாதி பிராது சொத்தில் 5 செண்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் கிரையம் வாங்கியவர்களின் சுவாதீனத்தில் உள்ளது. பட்டா மாற்றிய விபரங்கள் வாதிகளுக்கு தெரியும். அதற்கு வாதிகள் வருவாய் அலுவலகங்களில் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **05-08-2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| **அ.வ.எண்.** | **82/2011** | **பி.வா.சா.** | **1** |
| **பெயர் :** | **சிங்காரவேலன்** | **த/பெ. :** | **ராமு** |
| **தாலுகா :** | **நத்தம்** | **கிராமம் :** | **ந.கோவில்பட்டி** |
| **தேதி :** | **21.11.2019** | **வயது :** | **40/2019** |

**1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-**

**<u>வாதி தரப்பு கு.வி</u>**: வழக்கு 2011ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. கடந்த 7 மாதங்களுக்கு முன்பு தான் வழக்கு குறித்து தெரியும். வழக்கின் விபரங்கள் குறித்து நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. எனக்கு நோட்டீஸ் வந்த பின்புதான் தெரியும். வழக்கில் யார் வாதி என்றும், யார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வசந்தா என்பவர் காட்டினை வாங்கிய அனைவர்மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 3ம் பிரதிவாதி மதியரசியை எனக்கு தெரியும். 3ம் பிரதிவாதியின் தாயார் தான் 1ம் வாதி என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியுடன் பிறந்தவர்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதியை நான் கிரையம் வாங்கியதற்கு பின்னிட்டு தான் எனக்கு தெரியும். எதிர்வழக்குரையில் 3ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு 04-10-1999ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மகன்கள் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி சொத்தின் ஒரு பகுதியை 7ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் 6ம் பிரதிவாதியிடமிருந்து 06-12-2013ம் தேதி கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியிடமிருந்து 7ம் பிரதிவாதி கடந்த 26-12-2013ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 2 கிரையங்களும் வழக்கு நிலுவையில் உள்ளபோது வாங்கியுள்ளோம் என்றால் வழக்கு நிலுவையில் இருந்த விபரங்கள் எனக்கு தெரியாது. இந்த சொத்துக்கள் தவிர்த்து வேறு நிலம் வாங்கியுள்ளேனா என்றால் வீட்டுமனை வாங்கியுள்ளேன். பொதுவாக சொத்து வாங்கும்போது மூலபத்திரம் மற்றும் வில்லங்க சான்றிதழ் சரிபார்ப்பது உண்டு. அதுபோல் தான் இந்த வழக்கு சொத்தினை வாங்கும்போது வில்லங்க சான்றிதழ்கள் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அது பத்திர அலுவலகத்தில் காணாமல் போய்விட்டது. சாட்சி திரும்பவும் காலப்போக்கில் எங்கு காணாமல் போனதென்று தெரியாது என்று குறிப்பிட்டார். அவ்வாறு காணாமல் போனதாக முதல் விசாரணையிலும், எதிர்வழக்குரையிலும் குறிப்பிடவில்லை என்றால் கேட்காததால் குறிப்பிடவில்லை. 1ம் பிரதிவாதியின் பெயரில் இருந்த மூலபத்திரம் மற்றும் 6ம் பிரதிவாதி பெயரில் இருந்த பத்திரங்களை சரிபார்த்து நான் கிரையம் வாங்கினேன். 3ம் பிரதிவாதி வழக்கு சொத்தை தவிர்த்து வேறு சொத்துக்களையும்

செக்யூரிட்டியாக 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விபரங்கள் எனக்கு தெரியும். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் சொத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் தங்களுடைய மற்ற சொத்துக்களில் எடுத்துக்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ள தென்றால் சரிதான். அவ்வாறு செக்யூரிட்டியாக கொடுக்கப்பட்ட சொத்துக்களை 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்களுடைய மகனான பிரபாகரன் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. வழக்கின் சொத்துக்கள் 1ம் வாதியின் கணவர் 2 முதல் 6 வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுகம்பிள்ளை சுயார்-ஜித்திய முறையில் சம்பாதித்த சொத்து என்றால் தெரியாது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது நானும், 7ம் பிரதிவாதியும் சேர்ந்து 9ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்து சுயார்ஜிதமுறையில் சம்பாதித்த சொத்துக்கள் இல்லையென்றால் 3ம் பிரதிவாதிக்கு சீதனமாக கொடுக்கப்பட்ட சொத்தாக சொன்னார். அவருடைய தந்தையார் சீதனமாக கொடுத்தார். சீதனம் கொடுத்த விபரம் 1ம் பிரதிவாதியின் மகன் மச்சக்காளை சொல்லி எனக்கு தெரியும். அவ்வாறு சீதனமாக கொடுக்கப்பட்டது என்பது குறித்து ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் தாய் பத்திரத்தில் சீதனமாக கொடுக்கப்பட்டது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு தாய் பத்திரத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், 1, 5 முதல் 9 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து 2 மற்றும் 3 பிரதிவாதிகளுடன் மோசடியாக சேர்ந்து வாதிகளின் பாகத்தை ஏமாற்றி மோசடி செய்யவேண்டும் என்பதற்காக ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் கிரையம் வாங்கி திரும்ப 9ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து சொத்துக்களில் தொடர்ச்சியாக வில்லங்கத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் உள்ளது தெரிந்து தான் நான் மற்றும் 7ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் நான் கிரையம் வாங்கிய மற்றும் கொடுத்த பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல. சொத்துக்களுக்கு பாத்தியமில்லாத நபர்களிடம் கிரையம் வாங்கியதால் மேற்சொன்ன பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல.

<u>**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு கு.வி**</u> : இல்லை.

<u>**9ம் பிரதிவாதி தரப்பு கு.வி:**</u> இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **21.11.2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண். 82.∴2011 பி.வா.சா. : 3

பெயர் : கருப்பையா த/பெ. : ஆணைக்குட்டியாபிள்ளை

தாலுகா : நத்தம் கிராமம் : ந.கோவில்பட்டி

தேதி : 29.01.2020 வயது : 58/2020

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**முு.வி. :** பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். கடந்த 28-03-2014ம் தேதி 7 மற்றும் 8 பிரதிவாதிகளிடமிருந்து நான் தாவாச் சொத்தை கிரையம் வாங்கியதற்கான கிரைய பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். (வழக்கு நிலுவையில் இருந்தபோது கிரையம் வாங்கியுள்ளதால் வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 24-11-2014ம் தேதியிட்ட தாவாச் சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கினை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**<u>கு.வி:</u>** வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க கு.வி வேறு ஒரு நாள் ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **29-01-2020** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண். 82.∴2011 பி.வா.சா. : 3

பெயர் : கருப்பையா த/பெ. : ஆணைகுட்டியாபிள்ளை

தாலுகா : நத்தம் கிராமம் : ந.கோவில்பட்டி

தேதி : 17.02.2020 வயது : 58/2020

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

__வாதி தரப்பு கு.வி:__ வாதிகள் மற்றும் 2, 3 பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். 3ம் பிரதிவாதி பேரூராட்சியின் கவுன்சிலராக இருந்தார் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கணவன் மனைவி என்றும், அவர்களுடைய மகன் பிரபாகரன் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் மகளை தியாகராஜன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2 முதல் 6 வாதிகளின் தந்தை மற்றும் 3ம் பிரதிவாதியின் தந்தை பெயர் ஆறுமுகம் பிள்ளை என்றால் சரிதான். வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதியை தவிர்த்து ஆறுமுகம் பிள்ளைக்கு வேறு வாரிசுதாரர்கள் உள்ளார்களா என்றால் தெரியாது. வழக்கு நிலுவையில் உள்ளபோது தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய 28-03-2014ம் தேதிக்கு பின்னிட்டு 8 மாதங்கள் கழித்து தான் வில்லங்கச் சான்றிதழ் நகல் போட்டு பார்த்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு முன்னால் தாவாச் சொத்தை கிரையம் வாங்கிய முன்பாக்கியஸ்தர்களின் மூலபத்திரத்தை பார்த்து தான் கிரையம் வாங்கினேன். 2 மற்றும் 3வது பிரதிவாதிகளிடமிருந்து முதலில் 1ம் பிரதிவாதி தான் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தில் ஒரு பகுதியை தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 5 மற்றும் 6 பிரதிவாதிகள் 7 மற்றும் 8 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 7 மற்றும் 8 பிரதிவாதிகளிடமிருந்து தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். 5 பிரதிவாதிகள் முதல் நான் வரை வழக்கு நிலுவையில் இருந்தபோது தான் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையம் செல்லாது என வாதிகள் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 2 மற்றும் 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய சாசனம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் விற்பனை செய்த சொத்தில் வில்லங்கம் ஏற்பட்டால் 2ம் பிரதிவாதி தன்னுடைய தனிப்பட்ட சொத்தைக் கொண்டு வில்லங்கத்தை தீர்ப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் இல்லை என்பதால் தான் 2ம் பிரதிவாதியான தன்னுடைய கணவரையும் பாதுகாவலராக சேர்த்து 3ம் பிரதிவாதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய 5 செண்ட் நிலத்தின்



வழியாகதான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு செல்லமுடியும் என்றால் சரிதான்.

பாதையும், மேற்கு மற்றும் வடபுறம் மொத்தம் 2 ஏக்கர் 25 செண்ட் நிலம் எனக்கு உள்ளது. வா.சா.ஆ.3ன் படி 2ம் பிரதிவாதி அவருடைய தனிப்பட்ட சொத்தாக குறிப்பிட்ட சொத்தை அவருடைய மகனான பிரபாகரனுக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது வழக்கு குறித்து தெரிந்து கொண்டே 1, 5 பிரதிவாதிகள் முதல் நான் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு முழு உரிமையில்லாத சொத்தை நாங்கள் கிரையம் வாங்கியுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. அதனால் வாதி வழக்கை ஆட்சேபிக்க எனக்கு உரிமையில்லை என்றும், நான் வாங்கிய கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை தயார் செய்தததற்கு சொத்தின் மூலப்பத்திரத்தை காண்பித்து தான் எதிர்வழக்குரை தயார் செய்ய சொன்னேன் என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை வழக்கறிஞரிடம் கொடுத்து எதிர்வழக்குரை தயார் செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதி வாங்கிய கிரையமும், அதன் தொடர்ச்சியாக உள்ள மற்ற கிரையமும் செல்லாது என்றால் சரியல்ல.

**<u>2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு கு.வி:-</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **17-02-2020** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.